# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 443/2016/பே–2

ஆணை எண்: 189/2017

நாள்: 24/07/2017

திரு. R. பாஸ்கரன்,
எண். 30/10, முத்தமிழ் தெரு,
கீழ்ப்பெரும்பாக்கம்,
விழுப்புரம் மாவட்டம் – 605 602.

**முறையீட்டு மனுதாரர்**

திரு. அ. சம்பத்,
பேரூராட்சி மன்ற முன்னாள் துணைத் தலைவர்,
அனந்தபுரம் பேரூராட்சி,
விழுப்புரம் மாவட்டம்.

**எதிர் மனுதாரர்**

## ஆணை

விழுப்புரம் மாவட்டம், 30/10, முத்தமிழ் தெரு, கீழ்ப்பெரும்பாக்கம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. பாஸ்கரன், அவரது 18.6.2013 நாளிட்ட முறையீட்டு மனு பேரூராட்சிகளின் இயக்குனர் கடிதம் ந.க.எண்.15528/2013/இ2 நாள் 10.5.2016ன் வாயிலாக இம்முறைமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. 17.5.2016 அன்று பெறப்பட்டு 443/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு, கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

புகார் கொடுத்த திருமதி. விட்டோபாய், அவரது கணவர் திரு. ஆர். கோவிந்தசாமி 30.8.1979ல் இவரின் பட்டா நிலம் புல எண்.72/20–33 செண்ட் நிலத்தை அனந்தபுரம் அரசு மருந்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது. அவரின் அனுபவப் பாத்தியமான கல்லாங்குத்து புறம்போக்கு புல எண். 70/1ல் உள்ள நிலம் இவர்களின் மூதாதையர் காலத்தில் இருந்தே 130 ஆண்டுகளாக பராமரித்து அனுபவத்தில் இருந்து வருகிறது என மனுதாரர் தெரிவித்துள்ளார்.

தற்போது அரசு புறம்போக்கு இடத்தை அனுபவிப்பதற்காக அரசுக்கு தண்டத்தீர்வையாக கடந்த 11 ஆண்டுகளாக செலுத்தி வந்துள்ளார்கள் எனவும் இவ்வாறு இவர்கள் அனுபவித்து வந்த இடத்தில் தானே புயலுக்கு ஆறு மாத காலத்திற்கு முன்பாக அவ்விடத்தில் கூரை வீடு கட்டி அனுபவித்து வந்த வீடு சேதமடைந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார். பின்னர் 3 மாதத்திற்கு முன்பு இந்த இடத்தில் கான்கிரீட் மெத்தை வீடு கட்ட ஏற்பாடு செய்து வீடு கட்டி முடியும் தருவாயில் உள்ளதெனவும் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனந்தபுரம் பேரூராட்சி மன்ற முன்னாள் துணைத்தலைவர் திரு. அ. சம்பத், மேற்படி பேரூராட்சியின் முன்னாள் தலைவர் திரு. எம். கண்ணன், 6வது வார்டு உறுப்பினர் திரு. எஸ். ரவி, 5வது வார்டு உறுப்பினர் திரு. எம். சேகர் மற்றும் திரு. ஜெயசங்கர் ஆகியோரால் மனுதாரர் விட்டோபாய் புல எண்.70/1ல் உள்ள கல்லாங்குத்து புறம்போக்கு நிலம் சுமார் 4 ஏக்கர் அளவிலுள்ள இடம் (1973ம் ஆண்டிலிருந்து) அரசு மருத்துவமனைக்கு இவ்விடம் தேவை என பேரூராட்சியில் தீர்மானம் போடப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அனந்தபுரம் பேரூராட்சியில் 1996 ஆம் ஆண்டு முதல் 2001 வரை திரு.அ.சம்பத் பேரூராட்சி தலைவராகவும், 2001 முதல் 2006 வரை திரு.எம். கண்ணன், பேரூராட்சி தலைவராக பதவி வகித்து கல்லாங்குத்து புறம்போக்கில் சுமார் 2 ஏக்கருக்கு கூடுதலான இடங்களை மனைகளாக பிரித்து விற்றுள்ளனர் என்றும் இதில் 15க்கும் மேற்பட்டோர் வீட்டு மனைகள் வாங்கி, வீடு கட்டி அனுபவித்தும் வருகின்றனர் என்றும் பின்னர் 2011ல் 20 பேருக்கும் மேற்பட்டோர் மேற்கண்ட புல எண்ணில் அரசின் இலவச வீட்டு மனை பட்டாவும் பெற்றுள்ளனர் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புல எண். 70/1ல் வீடு கட்டியுள்ள 1) திருமதி. விட்டோபாய் 2) திருமதி. சாமுண்டீஸ்வரி 3) திரு. மூர்த்தி ஆகிய மூன்று நபர்களுக்கு 5ம் எண் நோட்டீஸ் வருவாய் துறை அலுவலர்கள் வழங்கியுள்ளனர். இதில் 1வது நபர் வீடு கட்டி முடியும் தருவாயிலும், 2வது நபர் வீடு கட்டி குடியிருந்தும், அரசின் வீட்டு வரி ரசீது மற்றும் மின்இணைப்பு பெற்று மின் கட்டணம் ரசீதும் பெற்றுள்ளார். 3வது நபர் வீடு தளம் போட்டு முடிக்கப்பட்டுள்ளது என்றும் இதில் மேற்கண்ட விட்டோபாய், சாமுண்டீஸ்வரி ஆகிய இருவரும் செஞ்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வருவாய் துறை அலுவலர்களுக்கு எதிராக நிரந்தர தடை கோரி வழக்கு தொடுத்துள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பேரூராட்சி முன்னாள் துணைத்தலைவர் திரு. அ. சம்பத், முன்னாள் தலைவர் திரு.எம்.கண்ணன். 6வது வார்டு உறுப்பினர் திரு. எஸ். ரவி. 5வது வார்டு உறுப்பினர் பாஞ்சாலி என்பவரின் கணவர் திரு. எம். சேகர் மற்றும் திரு. ஜெயசங்கர் ஆகியோர் போலியான பெயரில் சமூக ஆர்வலர் கூட்டமைப்பு என்ற பெயரை பயன்படுத்தி அரசு அதிகாரிகள். காவல் துறை அதிகாரிகள் மற்றும் பொது மக்களையும் ஏமாற்றி வருவதாகவும் இவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவும். புகார் மனு அளித்த திருமதி. விட்டோபாய் அவர்களுக்கு வேறு வீடு இல்லாததாலும் கட்டி முடியும் தருவாயில் உள்ள வீட்டினை கட்டி முடிக்கும் வகையிலும் இவருக்கு அரசு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் மனுதாரர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இப்புகார் மனு மீது முறைமன்ற நடுவ அறிவிப்பாணை 443/பே–2/16 நாள் 11.1.2017ன் வாயிலாக விளக்க அறிக்கை சமர்ப்பித்திட செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. அனந்தபுரம் செயல் அலுவலர் தனது 25.1.2017 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், அனந்தபுரம் பேரூராட்சியில் வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்த மருத்துவமனைக்காக 1979–ல் இப்பேரூராட்சியின் தலைவராக பொறுப்பு வகித்து வந்த திரு. தண்டபாணி செட்டியார் என்பவர்அனந்தபுரம் பகுதியில் உள்ள கீழ்மலை திரிசு கல்லாங்குத்து புறம்போக்கு இடம் ரீ. சர்வே எண்.70/14.19ல் 1.20, ச.எண்.1/45ல் 0.30 ஹெக்டார் நிலம், ச.எண்.72/13ல் 0.99 சென்ட் நிலம் திரு. பசுவலிங்க செட்டியார் அவர்களிடமும் ச.எண்.72/20ல் 0.98 சென்ட் நிலம் தண்டபாணி கவுண்டர், நாகராஜ் உடையார் மற்றும் கோவிந்தசாமி கவுண்டர் ஆகியவர்களிடமிருந்து பட்டா இடம் பணம் கொடுத்து பட்டாதாரர்களிடம் இடத்தினை வாங்க அழைத்து பேசியதில், மேற்காணும் மூவரும் ஒத்துவராத நிலையில் ஊர் நலம் கருதி நீதிமன்றம் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு மேற்காணும் பட்டாதாரர்களுக்கு பணம் வழங்கி அதற்குரிய சர்வே எண்களில் உள்ள இடங்களை அரசு பொது சுகாதார மருத்துவமனை அமைக்க அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தீர்மான எண்.36/1973 நாள்:25.6.1973, 56/25.11.1973, 53/21.2.2007, 261/28.5.2009 மற்றும் 359/26.05.2010ன் மூலம் அரசுக்கு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அனந்தபுரம் பகுதியில் அரசு பொது மருத்துவமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மேற்காணும் சர்வே எண்களில் உள்ள இடங்களில் மருத்துவமனை கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது. 28.01.2009ல் பேரூராட்சி மூலம் 20 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தீர்மானம் இயற்றி வருவாய் துறைக்கு அனுப்பப்பட்டு, செஞ்சி வட்டாட்சியர் அவர்கள் மூலம் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 20 நபர்களுக்கும் பட்டா

வழங்கப்பட்டதில் இருந்து மீதமுள்ள மருத்துவமனைக்கு சொந்தமான இடத்தினையும் ஆக்கிரமிப்பு செய்து பட்டா வழங்க கோரியது தெரிய வந்ததின்பேரில் பேரூராட்சிக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றிட நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க தெரிவித்ததன் பேரில் தொடர் நடவடிக்கையாக ஆக்கிரமிப்புதாரர்கள் திரு. பெ. மூர்த்தி, திரு. கோ. சரவணன் மற்றும் திரு. ரா. கோவிந்தசாமி என்பவர்களுக்கு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டு, வருவாய் கோட்டாட்சியர், திண்டிவனம் அவர்களுக்கு அனந்தபுரம் மருத்துவமனையின் விரிவாக்கத்திற்கு தேவையான இடம் இல்லை என்பதை தெரிவித்து மேற்கண்ட ஆக்கிரமிப்பை அகற்ற உரிய மேல்நடவடிக்கை மேற்கொள்ள செயல் அலுவலரால் கோரப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5.03.2013ல் சமூக ஆர்வலர்கள் மற்றும் ஆக்கிரமிப்புத்தாரர்களையும் அழைத்து சமாதானக் கூட்டம் வருவாய் வட்டாட்சியர் அவர்களின் தலைமையில் செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றதில் ஆக்கிரமிக்கப்பட்ட புல எண். 70/1இல் ஆக்கிரமிப்பு செய்துள்ள 3 நபர்களுக்கும், 5ஆம் எண். அறிவிப்பு சார்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 8.03.2013 க்கு பின் வீடு உள்ள இரண்டு நபர்களுக்கு தொடர் நடவடிக்கையும், புதிய கட்டுமானத்தை அகற்றவும், புல எண்ணில் உள்ள மீதமுள்ள இடங்களை ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்டால் காவல்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்து மேற்படி தீர்மானங்களை ஏற்றும் 06.03.2013 இல் நடைபெறவிருந்த உண்ணாவிரத போராட்டம் கைவிடப்படும் என சமாதான கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.03.2013–ல் செஞ்சி நீதி மன்றத்தின் மூலம் திரு.கோ.சரவணன் என்பவரின் உறவினர் பெயரில் கட்டியுள்ள (ஆக்கிரமிப்பு செய்துள்ள) வீட்டுக்கு பட்டா இல்லை எனவும் குடும்ப சொத்தான சர்வே எண். 72/20இல் 33 செண்ட் பட்டா நிலம். 1979 ஆம் ஆண்டு அரசு மருத்துவமனை அமைக்க வழங்கப்பட்டது என்றும் பட்டா கோரி வழக்கு எண். O.S.No. 41/2013, 42/2013 இன் வாதி திருமதி. கோ. விட்டோபாய் மற்றும் எஸ். சாமுண்டீஸ்வரி என்பவர்களால், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் வட்டாட்சியர், செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி மன்றத் தலைவர் அவர்களின் பெயர்களை பிரதி வாதியாக சேர்த்து வழக்கு தொடுத்துள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப்பொருள் தொடர்பாக ஆக்கிரமிப்பு செய்துள்ள திருமதி. விட்டோபாய் க/பெ. ஆர். கோவிந்தசாமி மற்றும் திருமதி. எஸ். சாமுண்டீஸ்வரி என்பவர்களால் சென்னை உயர்நீதி மன்றத்திலும் வழக்கு எண். W.P 15241/ 2013இன் மூலம் வழக்கு தொடுத்து இவ்வழக்கு 7.6.2013ல் இப்பொருள் தொடர்பாக மேற்காணும் விவரப்படி செஞ்சி மாவட்ட முதன்மை

நீதி மன்றத்தில் தொடுத்துள்ள வழக்கு எண். O.S.No. 41/2013, 42/2013 இன் மூலம் தீர்வு செய்து கொள்ள தெரிவித்து உயர்நீதி மன்ற வழக்கினை தள்ளுபடி செய்து நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். மேலும் செஞ்சி மாவட்ட முதன்மை நீதி மன்றத்தில் தொடுத்துள்ள வழக்குகள் இன்று வரை நிலுவையில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இப்புகார் மனு தொடர்பாக முறைமன்ற நடுவ அழைப்பாணை வாயிலாக 28.2.2017 மற்றும் 24.4.2017 ஆகிய தேதிகளில் விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது. மேற்படி இரு விசாரணைக்கும் மனுதாரர் ஆஜராகவில்லை.

மேற்கூறிய நிலையில் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்தில் உள்ள வீடுகள் குறித்து செஞ்சி மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிள்ளது. 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தின்படி பிரிவு 10 (3) (b)-ன்படி நீதிமன்ற ஒன்றின் முன்பு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவத்தின் விசாரணைக்கு உட்படுத்த இயலாது எனவே மேற்படி நீதிமன்ற வழக்கில் பெறப்படும் தீர்ப்பின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கை எடுத்திட அனந்தபுரம் பேரூராட்சி செயல் அலுவலரை வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 24-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

**பெறுநர்**

1. திரு. R. பாஸ்கரன்,
   மனித உரிமைகள் கழகம்,
   எண்.30/10, முத்தமிழ் தெரு,
   கீழ்பெரும்பாக்கம்,
   விழுப்புரம் மாவட்டம் – 605 602.

2. செயல் அலுவலர்,
   அனந்தபுரம் பேரூராட்சி,
   விழுப்புரம் மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   குறளகம், சென்னை – 600 108.